மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தமிழ்த்திரையிசைப் பாடல்களில் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்

# An Investigation into Tamil Cinema Songs on Poetic Values and Grammar

குமரன் வேலு இராமசாமி / Kumaranvelu Ramasamy[1]
[1]Programme Management Consultant, Mastura International College, Rawang
Corresponding Email: rkumaravalu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

புகழ்பெற்ற திரைப்படப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதையின் கூறுகளையும் கவித்துவத்தையும் அடையாளம் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். 1940 முதல் 2023 வரை வெளிவந்த திரைப்படப் பாடல்களில் ஒவ்வொரு 20 ஆண்டுக் கால இடைவெளியில் புகழ்பெற்ற 5 பாடல்களை மட்டும் ஆய்வுக்கான கால அளவு கருதி இணையம், முகநூல், வலையொளி வழி அடையாளம் காணப்பட்டு மொத்தம் 20 பாடல்கள் ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டன. இந்த 20 பாடல்களில் காணப்படும் கவித்துவம், மரபிலக்கணக் கூறுகள் அடையாளம் காணப்பட்டன. கவிதை, கவித்துவம், மரபிலக்கணக் கூறுகள் குறித்த தெரிவல்கள் அனைத்தும் அச்சு ஊடகங்களிலும் இணைய ஊடகங்களிலும் வெளிவந்த நூலாய்வின் வழியாகவே பெறப்பட்டன. சாதாரண மக்களின் மனத்தினில் எப்போதும் நின்று அவர்களின் விருப்பப் பாடலாக விளங்கும் சில திரைப்படப் பாடல் வரிகளில் காதல், அன்பு, பாசம், ஏமாற்றம், கவலை, பிரிவுத் துயரம், வீரம், பற்று, தோல்வி என மனிதமன உணர்வுகளோடு ஒன்றிப்போகும் அளவுக்கு அந்தப் பாடல்களில் நிறைந்துள்ள கருத்துக்கள் சிறந்த சொல்லாட்சி, கற்பனை, உவமை, உருவகம், சிலேடை மூலம் சந்தத்தோடும் ராகத்தோடும் வெளிபடுத்தப்படுவதால் திரைப்படப்பாடல்கள் சாதாரண மக்களின் நினைவுகளில் நிலைக்கின்றன என்பதை இந்த ஆய்வு கண்டறிகிறது. பல்லாயிரக்கணக்கான பாடல்களில் எல்லாப் பாடலையும் மக்கள் நினைவில் கொள்வதில்லை. மேலும், திரைப்படப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் அமைவதற்குப் பெரும்பாலான கவிஞர்கள் பெற்ற மரபிலக்கணப் பயிற்சியும் ஒரு காரணம். எனவே, காலங்கள் மாறினாலும் திரைப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் இல்லாமல் இருக்காது. கவித்துவத்தின் தேவையும் குறையாது என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. மேலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மரபிலக்கணம் கற்பிக்கப்பட வேண்டுமாயின் கருத்துள்ள மரபு சாயல் உடைய திரைப்பாடல்களைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தலாம். மொழிமீது ஈர்ப்பு அதிகரிப்பதோடு மாணவர்கள் கவித்துவ இன்பத்தையும் அனுபவிக்க முடியும்.

**கருச்சொற்கள்:** கவிதை, கவித்துவம், சொல்லாட்சி, திரைப்பாடல்

**Abstract**

The purpose of this study is to identify elements of conventional poetry and poetics found in popular film lyrics. Among the film songs released from 1940 to 2023, only 5 famous songs were identified in every 20-year interval, and a total of 20 songs were selected for the study. The poetic and grammatic elements found in these 20 songs were identified. Information on poetry, poetics and classical grammar elements were all obtained through literature review in print media and online media. There are some songs that always stand in the minds of common people and become their favourite songs. The lyrics of the movie songs are so much united with the human feelings like romance, love, affection, disappointment, anxiety, separation grief, heroism, attachment, failure and etc. The ideas contained in the songs are excellent rhetoric, imagination and allegory while the metaphor is expressed through the pun with rhythm and rhymes. This shows that film songs remain in the memories of common people due to these factors. Though tens of thousands of songs are released people don't tend to remember every song but the lyrics with good melody lingers in their minds. The influence of traditional poems on film songs is just inevitable. One of the reasons for this is the traditional poem writing training that most of the film song writers received. Times may have changed but the influence of traditional poems in cinema songs still remain. This study shows that the need for traditional poetry does not diminish even in cinema lyrics. The traditional poetry grammar should be taught to school children and Tamil-language cinema songs with a traditional poetry touch can be used in teaching and learning. This initiative will increase students' interest in language learning and can also help enjoy poetic pleasure.

**Keywords:** Kurunthokai, Kabilar, Psychological, approach

## முன்னுரை

திரையிசைப்பாடல்கள் ஒலிக்காத வீடுகளே இல்லை எனும் அளவுக்கு இதுவரை எந்த வகை இலக்கியமும் செய்யாத சாதனையைத் திரையிசைப் பாடல்கள் புரிந்திருகின்றன என்கின்றார் பாலகணேசன்(2020). இன்று மக்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கும் திரைப்படப் பாடல்கள் அவர்களைக் கவர்ந்திழுக்க்க காரணமாவது என்ன? இசையா? அல்லது பாடல் வரிகளா? பாடல் வரிகள் இன்றி வெறும் இசை மட்டுமே அல்லது இசையின்றிப் பாடல் வரிகள் மட்டுமே அத்தகைய ஈர்ப்பை மக்களிடம் ஏற்படுத்துமா? திரைப்படப் பாடல்களின் ஈர்ப்புக்கும் புகழுக்கும் இசையும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் பாடல் வரிகளின் பங்களிப்புக் குறித்துதான் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்த் திரைப்படப் பாடல் வரிகளில் உள்ள அந்த மொழிக் கூறுகள் என்ன என்பதையும் அவை ஏன் கவித்துவம் மிக்கதாய்ச் சிலாகிக்கப்படுகின்றன என்பதற்கான காரணங்களையும் ஆய்வுகள் வெளிக்கொண்டு வரவேண்டும்.

## ஆய்வுச் சிக்கல்

பல்லாயிரக்கணக்கான தமிழ்த்திரையிசைப் பாடல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. தொடக்கக் காலத்தில் அவை பெரும்பாலும் மரபுகவிதை சாயலில் அமைத்திருந்தன. திரைப்படப் பாடல்கள் மரபுபாக்களைச் சார்ந்து எழுதப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் இன்று இல்லை. மக்களின் இரசனையும் மாறிக்கொண்டே வந்துள்ளது. பாடல்களில் இலைமறைகாயாக உவமை நயத்தோடு காதலை வெளிப்படுத்திய பாடல்கள் பிறகு கொஞ்சம் விரசத்தோடு காதலை வெளிப்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டன. எனினும், சில பாடல்கள் தொடர்ந்து எல்லாராலும் விரும்பப்படும் பாடலாக இருந்து வந்துள்ளன. அப்படி என்னதான் அப்பாடல்களில் உள்ளன? அப்பாடல் வரிகளில் உள்ள வசீகரிக்கும் தன்மை என்ன? எதனால் அவை மக்களால் விரும்பப்படுகின்றன என்பது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பற்றி செய்த ஆய்வுகள் பெரும்பாலும் பாடல்களில் காணப்படும் மொழியணி குறித்த ஆய்வுகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, இரவிச்சந்திரன் & அமுதா (2021), ஆய்வு திரைப்படப் பாடலில் மொழியணி குறித்ததாக இருக்கிறது. பாமா பெரியசாமி (2018) ஆய்வு மாணவர்க்குக் கவிதை கற்பிக்கத் திரையிசைப்பாடலில் உள்ள பொதுவான கவிதைகூறுகளான பாடுபொருள், பொருள்நயம், ஒசை நயம்,சொல்நயம், அணிச்சிறப்பு பாடல் வரிகளில் உள்ள கவிதை கூறுகளுக்கும் கவித்துவத்துக்கும் உள்ள தொடர்பை அவை ஆய்வு செய்யவில்லை.

## ஆய்வு எல்லை

பாடகரின் குரல் வளம், இசை, இலக்கிய நயம், தலைமுறை சூழல் (genre, இன்று இருக்கிற நவீன ஹிப் போப், ராக், ரெகே), பாட்டின் வகை (எ.கா, கருநாடக இசைப்பாட்டு, குத்துப்பாட்டு) போன்ற காரணிகள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

**ஆய்வு நோக்கம்**

மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்படும் திரைப்படப் பாடல் வரிளில் அடங்கியுள்ள தன்மைகள் என்ன அவற்றுக்கும் மரபுகவிதையின் தன்மைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை ஆய்ந்தறிவதே இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

i. மக்களால் அதிகம் விரும்பப்பபட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதைக்கான கூறுகளைக் கண்டறிவது.
ii. மக்களால் அதிகம் விரும்பி ரசிக்கப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவத்தைக் கண்டறிவது.
iii. மக்களின் ரசனைக்கும் பாடல்களின் கவித்துவத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்குவது.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிகக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**ஆய்வு எல்லை**

பாடகரின் குரல் வளம், இசை, இலக்கிய நயம், தலைமுறை சூழல் (genre, இன்று இருக்கிற நவீன ஹிப் போப், ராக், ரெகே), பாட்டின் வகை (எ.கா, கருநாடக இசைப்பாட்டு, குத்துப்பாட்டு) போன்ற காரணிகள் இந்த ஆய்வில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

**ஆய்வு நோக்கம்**

மக்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்படும் திரைப்படப் பாடல் வரிளில் அடங்கியுள்ள தன்மைகள் என்ன அவற்றுக்கும் மரபுகவிதையின் தன்மைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை ஆய்ந்தறிவதே இந்த ஆய்வின் பொது நோக்கமாகும்.

i. மக்களால் அதிகம் விரும்பப்பபட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் மரபுகவிதைக்கான கூறுகளைக் கண்டறிவது.
ii. மக்களால் அதிகம் விரும்பி ரசிக்கப்பட்ட தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவத்தைக் கண்டறிவது.
iii. மக்களின் ரசனைக்கும் பாடல்களின் கவித்துவத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்குவது.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிகக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**ஆய்வு முக்கியத்துவம்**

திரைப்படத் தொழில் வணிக நோக்குடையது என்றாலும் மக்களை அதிகம் வசீகரிகக் கூடியதாக இருக்கிறது, மக்களின் இரசனை மாறி வரும் சூழலில், வெற்றிகரமான பாடல்களில் உள்ள அம்சங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. எனவே, திரைப்படப் பாடல்கள் தொடர்ந்து மக்கள் விரும்பும் கலை, பொழுது போக்கு வடிவமாக நிலைக்கவும் அவை கற்பிக்கப்படும் கலையாக மாறவும் ஆய்வுகள் இன்றியமையாதவை ஆகின்றன.

**மரபுகவிதையின் கூறுகளும் கவித்துவமும்**

**மரபுகவிதையின் அடிப்படை கூறுகள்**

மரபுகவிதைகள் சந்தம் (rhythm), தொடை (rhyme) என இரண்டு வடிவக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டவை எனவே ஒரு காலத்தில் அவை பாடவும் பட்டிருக்க வேண்டும் என்கிறார் சிவகுமார் (tamil.vu). எனினும், இவையிரண்டும் கவிதையின் புறநிலை என்றும் கவிதையை வாய்விட்டுப் படிக்கும் போதும் காதால் கேட்கும்போதும் ஓசையின்பம் கொடுக்கும் எனப் பச்சைப்பாலன்(2013) கருத்தைக் எடுத்துக்காட்டுகிறார் பாமா(2018). கவிதையைப் படித்துச் சுவைக்கும்போது வரிகளில் காணப்படும் பாடுபொருளும், சொல்நயமும் பொருட்சிறப்பும் அணிச்சிறப்பும் மனத்திற்கும் அறிவுக்கும் இன்பம் நல்குவதால் அஃது அகநிலையாகும்(பச்சைபாலன்,2013). கவிதையின் அகநிலையில் பாடுபொருள், பொருள்நயம், சொல்நயம், அணிச்சிறப்பு ஆகியவை உள்ளன. புறநிலையில் சந்தமும் தொடையும் ஓசை நயத்தைத் தருகின்றன. அவை காதுக்கு இன்பம் அளிப்பவை.

**அட்டவணை 1: மரபுகவிதையின் கூறுகள்**

| புறநிலை | அகநிலை |
|---|---|
| காதுக்கு ஓசை யின்பம் தருபவை<br>அ. சந்தம்<br>செப்பல் ஓசை (வெண்பா), அகவல் ஓசை (ஆசிரியப்பா), துள்ளல் ஓசை (கலிப்பா), தூங்கல் ஓசை (வஞ்சிப்பா), வாய்பாடு<br><br>ஆ.தொடை: | மனத்திற்கும் அறிவுக்கும் இன்பம் தருபவை<br>அ. பாடுபொருள்<br>ஆ. பொருள்நயம்<br>இ. சொல்நயம்<br>ஈ. அணிச்சிறப்பு<br>- உவமை |

| | |
|---|---|
| எ.கா எதுகை, மோனை, இயைபு, முரண், அந்தாதி, அளபெடை | - உருவகம் |

கவிதைக்குப் புறநிலை தேவையில்லை என்பர் புதுக்கவிதை, வசனக்கவிதை படைப்பாளர்கள் (விசால்ராஜா, 2020; எம்.யுவன், 2001). அவர்களைக் கடிந்த எழுத்தாளர் புதுமைப்பித்தன் (அனுமந்தன், 2013) யாப்பு கவிதைக்கு உருவம், அது விலங்கல்ல என்றும், அது கவிஞனின் வேகத்தின் நிலையை வடித்துக் காட்டும் என்றார். எனினும் யாப்பிலக்கண விதிகளின்படி வார்த்தைகளைக் கோத்து அமைத்திட்டால் மட்டும் ஒரு படைப்பு கவிதையாகி விடாதும் என்பார் புதுமைப்பித்தன். எனவே, யாப்பு எனும் இலக்கணக் காட்டுமானம் கவிதைக்குத் தேவை அல்லது தேவையில்லை என்று விவாதித்தாலும் கவிதைக்கு அது மட்டும் போதுமானதல்ல என்பது தெளிவு. கவிதைக்குக் கவித்துவம் என்ற ஒன்றும் தேவைப்படுகிறது.

**கவித்துவம்**

கவித்துவம் என்றால் இன்னது என்ற ஆணித்தரமான முன் விளக்கம் தராமலே விமர்சகர்களும் கவிஞர்களும் கவிதை வரிகளில் உள்ள கவித்துவம் குறித்துக் கருத்து தெரிவிக்கின்றனர் எ.கா. இங்கோ, (2023); விசால்ராஜா(2020); எம்.யுவன்(2001). எனினும் கவித்துவம் குறித்துக் கவிஞர்கள் கொடுக்கும் விளக்கங்கள் பெரும்பாலும் கவிதையின் அகநிலையையே சுட்டுகின்றன. ஆ.ஆலிஸ்(tamil.vu) கூறும் கவிதை மொழியும் கவிதையின் அகநிலையைக் குறிக்கிறது. கவிதை மொழியின் கூறுகளாகச் சொல்லாட்சி, உவமை, உருவகம் தரும் வர்ணனைகள், தொடர் அமைப்பு போன்றவை சரியாக அமையுமெனில் கவிதைகள் வெற்றிப் பெற்று ரசிக்கத்தக்கவையாகப் போற்றப்படும்.

**அட்டவணை 2: கவித்துவத்தின் வெளிப்பாடுகள்**

| **கவித்துவத்தின் வெளிப்பாடுகள்** | **நூல் சான்று** |
|---|---|
| கவிஞரின் புலமைத்திறம், கற்பனை, உணர்ச்சி, அதை வாசகனுக்குக் கடத்தும் உத்தி, வாசகன் மனமும் அறிவும் அடையும் இன்ப நிலை, ஒரு துணுக்குறும் கணம் | இளங்கோ (2023)<br><br>அபிலாஷ் (2014) |
| கவிஞர் பயன்படுத்தும் கவிதை மொழி<br>• சொல்லாட்சி, உவமை, உருவகம், வர்ணனை, தொடரமைப்பு<br>• சிலேடை | ஆலிஸ் (tamil.vu)<br><br>ஜெயந்தன் (2009) |
| புதிய சொற்கள், சொற்சேர்க்கைகள், புதிய சொல் வழக்குகள் | ஆசை (2014) |
| தன் சொல்லமுடியாமையை மொழியில் எட்டுவது | விசால் ராஜா (2020) |

| | |
|---|---|
| சொற்சுருக்கம், கருத்துச் செறிவு | பாமா பெரியசாமி (2018) |

**திரையிசைப்பாடல்களில் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்**

கவிதையின் வெகுமக்கள் உருவம்தான் திரைப்படப்பாடல்கள் என்கின்றார் விசால்ராஜா(2020). திரைப்பட பாடல்கள் கூட எளிதாக்கப்பட்ட ஒருவகை மரபுகவிதை வடிவம் எனும் கருத்தும் உள்ளது. திரைப்படப் பாடல்கள் சில புதுக்கவிதை நடையில் புனையப்பட்டிருந்தாலும் அப்பாடல்கள் உள்ளும் மரபு பாக்களின் தாக்கம் குறிப்பாக ஆசிரியப்பாவின் தாக்கம் இருப்பதாக ஜெயமோகன் (2014) கூறுகின்றார்.

மக்களைக் கவர்ந்த திரையிசைப்பாடல்களில் கவித்துவம் இருப்பதாகவும் அந்தப் பாடலின் வரிகள் தங்கள் மனத்தைக் கவர்வதாகவும் சில விமர்சகர்கள் கருத்திடுகின்றனர். காட்டாக 'தள்ளிப்போகாதே' திரைப்படத்தில் பாடலாசிரியர் தாமரை எழுதிய பாடலில் கலாபம் போலாடும் கனவினில் வரியும் (சுரேஸ் கண்ணன், 2017 ) என புதிய சொற்களையும், பாடலாசிரியர் வைரமுத்துவின் 'ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தான் என்று' (கிரிதரன், 2018) என்ற பாடல் வரிகள் புதிய முறையில் காதலை சொல்வதால் கவித்துவம் மிக்கது என்கின்றனர். ஆனால் கவித்துவத்தின் வெளிப்பாடாய் பாடல் வரிகளைக் காட்டினாலும் அந்த வரிகளில் ஒளிந்துள்ள கவித்துவத்துக்கான கூறுகளை அவர்கள் சுட்டவில்லை.

**ஆய்வு செய்முறை**

இணையத்தளம்(website), விக்கிப்பீடியா(wikipedia), முகநூல்(facebook), வலையொளி(youtube), வலைத்தளம் (blogspot) வழி மக்களின் விருப்பத்துக்குரிய, பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த தமிழ் திரைப்படப் பாடல்கள் எவை என முதலில் அடையாளம் காணப்பட்டது. 1940 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வெளிவந்த தமிழ்த் திரைப்படப் பாடல்களில் மக்களால் அதிகம் விரும்பிக்கேட்கப்பட்ட பாடல்கள் நூற்றுக்கணக்கானவை. எனினும் 1940 ஆம் ஆண்டு முதல் 1960வரை வெளிவந்த பாடல்கள் ஐந்து, 1960-1980, 1980-2000, 2000-2023 என ஒவ்வொரு கால இடைவெளிகும் சம நிகரைக் கொடுத்து ஐந்து பாடல்கள் என மொத்தம் 20 பாடல்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் குறைந்தது ஒரு பாடல் துள்ளல் ஓசையுள்ள குத்துப்பாடல், மெல்லிசையில் ஒலிக்கும் காதல் பாடல், சமூகத் தத்துவப் பாடல், சோகப் பாடல், பக்திப்பாடல் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இருபது பாடலாசிரியர்கள் புனைந்த பாடல்கள் தேர்வு செய்யப்பட்டன. அவர்களில் மரபுகவிதை நன்கு அறிந்தவரும் மரபுகவிதையுடன் உரைப்பா அல்லது புதுக்கவிதையும் எழுதும் பாடலாசிரியரும் அடங்குவர்.

மரபுகவிதை என்றால் என்ன, கவித்துவம் என்றால் என்ன, மரபுகவிதை கூறுகள் என்ன என்பதை நூலக ஆய்வின் வழியாக அறிந்துகொண்டு உருவாக்கப்பட்ட சட்டகம் ஒன்று ஆய்வுக்களமாக விளங்கியது.

தமிழ்த்திரையிசைப் பாடல் வரிகளில் காணப்படும் கவித்துவமும், நயமும், மரபிலக்கணக் கூறுகளும் இந்தச் சட்டகத்தின் துணையோடு ஆய்வு செய்யப்பட்டன. கட்டுரையின் அளவைப் பாதிக்கும் என்பதால் குறைவான பாடல்களே சான்றுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

**ஆய்வு முடிவுகள்**

**அட்டவணை 3: 1940 முதல் 2023 வரை தமிழ்த் திரைப்படங்களில் வெளிவந்த புகழ்பெற்ற 20 பாடல்களும் இயற்றியவர்களும் பாடு பொருளும் மரபிலக்கணக் கூறுகளும் கவித்துவமும்**

| ஆண்டு/ எண் | புகழ்பெற்ற திரைப்படபாடலின் தலைப்பு | பாடலாசிரியர் | மரபிலக்கணக் கூறுகள் | கவித்துவம் |
|---|---|---|---|---|
| 1948<br>1 | மாயாபிரபஞ்சமடி தங்கமே தங்கம் மதிமயங்கி கலங்கிடாதே தங்கமே தங்கம் | பாபநாசம் சிவன் | அடி எதுகை, சீர்மோனை | உருவகம் உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1952<br>2 | தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசை யெல்லாம் | உடுமலை நாராயணகவி | அடி எதுகை | உருவகம், முரண் |
| 1957<br>3 | விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே | எம்.கே. ஆத்மநாதன் | அடி எதுகை, சீர் மோனை | உருவகம் உவமை |
| 1958<br>4 | இன்று போய் நாளை வாராய் | மருதகாசி | அடி மோனை, சீனர் மோனை, அடி எதுகை, முரண், இயைபு | இலக்கிய நயம், உணர்ச்சி |
| 1958<br>5 | தூங்காதே தம்பி தூங்காதே | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் | அடி எதுகை, சீர் மோனை, இயைபு | உவமை, உருவகம் உணர்ச்சி |
| 1961<br>6 | ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் அவன்அன்பு மனங்களில் சிரிகின்றான் | எம்.கே ஆத்மநாதன் | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1966 7 | காகித ஓடம் கடலை மீது | கலைஞர் கருணாநிதி | சீர் மோனை | உவமை, உணர்ச்சி |
| 1966 8 | மலரும் வான் நிலவும் சிந்தும் அழகெல்லாம் உன் எழில்வண்ணமே | கு.மா. பாலசுப்பிரமணிய | இயைபு, அடி மோனை | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1967 9 | வேட்டையாடு விளையாடு விருப்பம்போல உறவாடு | ஆலங்குடி சோமு | சீர் மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1976 10 | கங்கை நதியோரம் ராமன் நடந்தான் | புலமைப்பித்தன் | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1978 11 | வசந்தக் காலக் கோலங்கள் வானில் விழுந்த கோடுகள் | கண்ணதாசன் | அடிமோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1985 12 | வண்ணம் கொண்ட வெண்ணிலவே | வைரமுத்து | சீர் மோனை, அடி எதுகை இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1992 13 | அம்மா வென்றழைக்காத உயிரில்லையே | வாலி | அடி மோனை, இயைபு அடி எதுகை | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 1997 14 | காதலா காதலா காதலின் சாதலா | மேத்தா | சீர்மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 2001 15 | வாடி வாடி நாட்டுக்கட்டை வசமா வந்து மாட்டிக்கிட்ட | அறிவுமதி | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி, முரண் |
| 2004 16 | ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே | பா.விஜய் | இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 2013 17 | ஆனந்த யாழை மீட்டுகிறாய் அடி நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய் | நா.முத்துக்குமார் | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 2019 18 | எள்ளுவய பூக்கலியே ஏரெடுத்தும் பார்க்கலியே | யுக பாரதி | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 2022 19 | மல்லிப்பூ வச்சு வச்சு வாடுதே | தாமரை | சீர் மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |
| 2022 20 | மைனரு வேட்டி கட்டி - மச்சினி மனசுல அம்பை விட்டான் | முத்தண்ணன் | அடி மோனை, இயைபு | உருவகம், உவமை, உணர்ச்சி |

**நிறைவுரை**

திரைப்படப் பாடல்களை மனப்பாடமாகச் சிலர் பாடுவதற்கு அவர்களின் நினைவாற்றல் மட்டுமே காரணம் என்பதற்கில்லை. பாடல் வரிகளில் உள்ள பொருண்மையும் ஓசைநயமும் உணர்ச்சியும் உள்ளத்தின் நிலைமைக்கேற்ற இசையின் இனிமையும் மூளையின் கவனக்குவிவு, நினைவாற்றல் பகுதிகளைத் தூண்டி விட்டு அப்பாடலை எளிதாக நினைவில் பதிக்க உதவுகின்றன.

மொழியியல் ரீதியாகத் தமிழ்த் திரைப்பாடல் வரிகளில் மரபிலக்கணக் கூறுகளான சந்தமும் தொடையும் அமைந்து கவித்துவமும் இருப்பதால் அவை எளிதாக மனப்பாடம் செய்யப்படுகின்றன. செறிவான சமூகக் கருத்துக்கள் கவித்துவத்தோடு பாட்டில் வருவதால் மனப்பாடம் செய்வதற்கு எளிதாக இருக்கிறது. எனவே, காலங்கள் மாறினாலும் திரைப்பாடல்களில் மரபு பாக்களின் தாக்கம் இல்லாமல் இருக்காது. கவித்துவத்தின் தேவையும் குறையாது என்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. மேலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் மரபிலக்கணம் கற்பிக்கப்பட வேண்டும். கருத்துள்ள திரைப்பாடல்களைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தினால் மொழி மீது ஈர்ப்பு அதிகரிக்கும்.

**துணைநூற்பட்டியல்**


Pachaibalan, N. (2013). Exams (தேர்வுக்களம்). Malaysia: Percetakan Sri Maju Publications.

Shahram Heschmat (2019), 6 reasons why we enjoy listening to sad music. https://www.psychologytoday.com/intl/blog/science-choice/201905/6

அபிலாஷ் (2014): திரையிசைப் பாடல்களில் கவித்துவம் (2) – வைரமுத்து http://thiruttusavi.blogspot.com/2015/06/2.html 12 மார்ச்சு 2023

அனுமந்தன், என்.ஆர். (2013). புதுமைப்பித்தன் கவிதைகள்- ஒரு சமகாலப் பார்வை. சொல்வனம் இதழ் 293. https://solvanam.com/2013/03/23. 18 மார்ச்சு 2023

ஆசை (2014). பிரமிளின் கவித்துவம் https://www.hindutamil.in/news/literature/2362-.html. 23 மார்ச் 2023

ஆலிஸ், ஆ. (tamil.vu). கவிமொழி. https://www.tamilvu.org/ta/courses-degree-a051-a0514-html-a051442-10100 10 ஏப்ரல் 2023

இரவீந்திரன், வெ. (2017). கவித்துவம் என்றால் என்ன ? மணிவாசகர் பதிப்பகம்: சென்னை-108.

இளங்கோ, நா. (2006). தொல்காப்பிய கவிதையியல் நோக்கில் பண்ணத்தி. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/download 12 மார்ச்சு 2023

ஏழை மக்களின் இலக்கியம் சினிமா பாடல்கள்தான் https://m.dinamalar.com/detail.p hp?id=1052128 12 மார்ச்சு 2023

கவிதை https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%88 20 மார்ச்சு 2023

கவிதை பற்றி எம் யுவன் - ஜெயமோகன் உரையாடல் (1,2,3) https://groups.google.com/g/panbudan/c/anH9qP1tgQI/m/7YLXrH8mDocJ 12 மார்ச்சு2023

கவிதையின் இலக்கணம் -நன்னூல் (2019). http://interestingtamilpoems.blogspot.com/2019/12/blog-post_.html?m=1 14 மார்ச்சு /2023

சியாமளா தேவி, மா. (2016). தொல்காப்பியமும் புதுக்கவிதையும். https://www.vallamai.com/?p=73877 20 மார்ச்சு 2023

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் https://www.tamilvu.org/courses/degree/p203/p2031/html/p2031551.htm 12/3/2023

பாமா பெரியசாமி. (2018). கவிதை கற்பித்தலை எளிதுப்படுத்தும் தமிழ்த் திரையிசைப் பாடல்கள். மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதழ், 2(4), 302-314.

பாலகணேசன் (2020). திரைப்பட பாடல்களில் அணிநயம் http://anthakakavi.blogspot.com/2020/06/blog-post.html 12 மார்ச் 2023

மரபுகவிதையின் முன்னோடி யார்? மரபுகவிதையின் கூறுகள் எவை? http://gopalakrishnanksah.blogspot.com/2012/07/btm-3108.html?m=1 12 மார்ச்சு 2023

ஜெயந்தன், ஆர்.சி (2009). நவீன கவிதைக்காரகளுக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒருபோதும் இடம் கிடைக்காது. கவியரசு நா.காமராசனுடன் ஒரு நேர்காணல். https://www.tamilauthors.com/10/1.html 20 மார்ச்சு2023